RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1977

# சமூக முன்னேற்றத்தில் கவிஞர் இரா. மீனாட்சி

மு. சபுரம்மா [அ, *], சு. சாகுல் ஹமீது [அ]

[அ] தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620020, தமிழ்நாடு, இந்தியா

# Poet R. Meenakshi's Social Progress

M. Saburamma [a, *], S. Sahul Hameed [a]

[a] Research Department of Tamil, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli-620020, Tamil Nadu, India

* Corresponding Author: saburamma.1969@gmail.com

Received: 12-09-2022
Revised: 30-10-2022
Accepted: 07-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Writers in their works highlights many events related to relationship system with the hope that the people in the society should live in harmony. Similarly, R. Meenakshi's poems is about the inequalities among the people, social concern, women's progress, individual human morality, self-sacrifice and humanity. There is nothing equivalent or comparable to the love and affection of a mother. Poets play an important role in such social progress. The article explores the strategies that Meenakshi put forward in the human society by removing the ignorance and ups and downs embedded among the people.

**Keywords:** Inequality, Perseverance, Chaste Wife, Humanity, Motherhood

## முன்னுரை

சமூகம் என்பது ஒரே மாதிரியான புவியியல் நிலப்பகுதியில் அல்லது அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியில் வாழ்கின்ற ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவைக் குறிக்கும். இத்தகையச் சமூக முன்னேற்றத்தில் கவிஞர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். நமது கவிஞர் இரா. மீனாட்சி அவர்கள் புல்லாங்குழல் என்ற மனித சமூகத்தில் கவிதை என்னும் காற்றைக் கொண்டு மக்களிடையே பொதிந்துள்ள அறியாமை மற்றும் ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து இந்த சமூகம் முன்னேற மேற்கொள்ளும் உத்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

## ஏற்றத்தாழ்வுகள்

பூக்களானது பல்வேறு நிறங்களிலும் வடிவங்களிலும் இருந்தாலும் அவைகளுக்கிடையே எவ்வித பாகுபாடுகளும் இன்றி ஒரே செம்மண் தரையிலே தாரைத்தாரையாய்ப் படர்ந்துள்ளதைப் போன்று, மனித சமூகத்திலே அவர்களின் நிறங்கள் வேறுபட்டாலும் அவர்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகள் விலகி சமத்துவமிக்க சமுதாயம் உருவாக வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார் என்பதை,

"சிவப்பு, வெள்ளை, மஞ்சள், ஊதா நிறங்கள்

பச்சைப் பரப்பில்

செம்மண் தரையுடன் தாரையாய்ப் படர்ந்து

இதுவரைக் கறுப்பாய், வெளுப்பாய் பலபேர்"

என்ற வரிகளின் மூலம் மனிதர்களின் நிறங்கள் வேறுபட்டாலும் அவர்களும் சக மனிதர்களே என்று மலர்கள் மனிதர்களைப் பார்த்துக் கூறுவதைப் போல் குறிப்பிட்டுள்ளார் (Meenakshi, 2013). மேலும் இதேகருத்தைவலியுறுத்திபாரதியார்

"வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்

வீட்டில் வளருது கண்டீர்!

எந்த நிறமிருந்தாலும் - அவை

யாவும் ஒரே தரமன்றோ?"

ஒரு பூனைத் தான் ஈன்ற குட்டிகள் எந்த நிறங்களாயினும் சாம்பல், கருஞ்சாந்து, பாம்பின் நிறம், வெள்ளைப் பாலின் நிறம் என்ற போதிலும் அந்த தாய்ப்பூனை எவ்வாறு அவைகளுக் கிடையே பாகுபாடு காட்டுவதில்லையோ, அதுபோல மனிதர்களின் நிறங்கள் வேறுபட்டாலும் அவர்களின் இன்பம், துன்பம், காதல், நட்பு ஆகியவை அவரவர்களின் வயதிற்கேற்ப எண்ணங்களும் செயல்களும் ஒன்றாகவே அமையும். ஆகவே, அவர்களிடையே பாகுபாடு காட்டுதல் கூடாது என்ற கருத்தை எடுத்துரைத்து சமூக முன்னேற்றத்தை வலியுறுத்துகிறார் (Subramanya Bharathiyar, 2014). இதே கருத்தை வலியுறுத்தி திருவள்ளுவர்,

"நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்

பண்புள பாடறிவார் மாட்டு"

வேடிக்கையாகக் கூட ஒருவரை இகழ்தலும் துன்பம் தருவதாகும். ஆகவே உலக இயல்பறிந்து நடப்பவர் பகைவரிடமும் பண்பு கெடாது நடந்துகொள்வர். இவ்வாறு கூறுவதன் மூலம் நாம் சகமனிதர்களிடையே எக்காரணங்களுக்காகவும் பாகுபாடு காட்டாது நல்ல பண்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றுரைக்கிறார் (Parimelalhagar, 2002).

## இருளில் ஓர் ஒளிக்கோல்

பொதுவாக கவிஞர்கள் ஒரு கருத்தை வலியுறுத்த காலங்களை முன்னிறுத்தி கூறுவதுண்டு. நமது கவிஞர் இரா. மீனாட்சி அவர்களும் எதிர்கால சமுதாயம் சிறந்து விளங்க செய்ய வேண்டிய அடிப்படைக் காரணிகளைப் பின்வருமாறு விளக்குகிறார்.

"புதியதோர் ஒளிக்கோலினால்

வருங்காலக் கவிதையின்

ஒரு நெடுஞ் சூத்திரத்தை

நிகழ்காலம் எழுதுகிறது"

இருளில் ஒளிக்கோலானது வெளிச்சத்தைத் தருவது போல, எதிர்கால சமூகம் அதன் மடமை என்னும் இருள் நீங்கி ஒரு சிறந்த சமுதாயம் உருவாக அந்த சமூகத்தின் நிகழ்காலம் ஓர் ஒளிக்கோலைப் போல விளங்குவதாகக் கூறுகிறார். அதாவது ஓர் சமூகத்தின் நிகழ்காலம் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து, ஏற்றத் தாழ்வுகளின்றி சமத்துவ சமுதாயமாக விளங்குமானால் அதன் எதிர்காலச் சமூகம் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை என்று புலப்படுத்துகிறார் (Meenakshi, 2020). இக்கருத்தையே,

"மனைக்கு விளக்கம் மடவார் மடவார்

தமக்குத் தகைசால் புதல்வர் மனக்கினிய

காதற் புதல்வர்க்குக் கல்வியே, கல்விக்கும்

ஓதிற் புகல்சால் உணர்வு"

வீட்டுக்கு ஒளிபெண்கள். பெண்களுக்கு நல்லியல்புகள் நிறைந்த மக்கள் ஒளிபோன்றவர். பெற்றோர் மனதிற்கு இனிமை தரும் அன்பிற்குரிய மக்கட்கு கல்வியறிவே ஒளிபோன்றது. அக்கல்வியறிவிற்கும் சொல்லுமிடத்துப் புகழ் நிறைந்த மெய்யுணர்வே ஒளியாகும் என்று நான்மணிக்கடிகை கூறுகிறது (Gowmarishwari, 2009). சமுதாயத்தின் அறியாமை என்னும் இருளை நீக்கும் காரணிகள் எவையெவை என்று பட்டியலிட்டுக் கூறுவதன் மூலம் சமூக முன்னேற்றத்திற்கான வழிகளையும் விளக்குகிறது. இதனையே பாரதியார் தனது கவிதையில் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உதவும் முக்கியமான கருவி கல்வியே என்பதை,

"வீடுதோறும் கலையின் விளக்கம்

வீதிதோறும் இரண்டொருபள்ளி

தேடு கல்வியிலாத தொரூரைத்

தீயினுக்கிரையாக மடுத்தல்"

ஒவ்வொரு ஊரிலும் பள்ளி இருக்க வேண்டும். கல்வி கற்க ஆதாரமான பள்ளியில்லாத ஊரைத் தேடிக் கண்டுபிடித்து அதனைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்று பாரதியார் வெகுண்டெழுகிறார். அறியாமை என்னும் இருள் நீங்கி, சமூகம் முன்னேற்றமடைய அடிப்படைக் காரணிகளில் ஒன்று கல்வியறிவுள்ள சமூகம் என்று கூறுகிறார் (Subramanya Bharathiyar, 2014).

## குடும்ப முன்னேற்றத்தில் பெண்

சமூக உறவுகளைப் பேணுவதில் பெண்களே முக்கியப் பங்கு வகிப்பதன் மூலம் அவர்கள் சமூக முன்னேற்றத்தின் ஓர் அங்கமாக விளங்குகிறார்கள் என்பதை,

"வண்டியொன்று வந்து நின்றது

நாத்தனாரின் நாத்தனார் குடும்பம் வந்திறங்கியது

எங்களுடன் விடுமுறை கொண்டாட!

ஞாயிறு போய் திங்களும் வந்துவிட்டது"

குடும்பப் பெண்ணானவள் வார விடுமுறையன்று அன்றைய தினத்திற்கென்றே நிர்ணயிக்கப்பட்ட பற்பல வீட்டு வேலைகளை முடிக்கிறாள். தன்னை அலங்காரப்படுத்திக் கொண்டு பொழுதுபோக்கு பாடல்களைக் கேட்டு இரசிக்கலாம் என்று தன் எண்ணங்களைத் தன் மனக்கண் முன் ஓடவிட்டு, அதனிடையில் ஒரு சிறிதளவு தேனீர் அருந்திவிடலாம் என்றெண்ணி வாசலுக்கு வந்தபோது அவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. தனது நாத்தனாரின் குடும்பம் அவள் விடுமுறையைக் கொண்டாட வந்திறங்கியதும், தனது உறவுகளுக்காக ஒரே நொடியில் அத்துணை ஆசைகளையும் புறந்தள்ளி விடுகிறாள். முகத்தில் புன்முறுவலுடன் அடுப்படியில் நுழைந்து வந்த உறவுகளை நாள் முழுவதும் உபசரித்து அனுப்புகிறாள். ஒரு குடும்பப் பெண்ணின் பெருமையை நயம்பட எடுத்தியம்புகிறார் ஆசிரியர் (Meenakshi, 2008). இக்கருத்தையே,

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்

இல்லவள் மாணாக் கடை"

என்ற குறள் வழி மனைவி நற்பண்புகள் உடையவளானால் கணவனிடத்து இல்லாதது ஒன்றுமே இல்லை. அவள் அவ்வாறு இல்லாதவளானால் அவனது வாழ்க்கையில் எதுவுமே இல்லை. இவ்வாறு கூறுவதன் மூலம் நற்பண்புகளுடைய மனைவியால் மட்டுமே குடும்பத்தை வளம் பெறச் செய்ய

முடியும். அதனால் அவளது கணவன் அனைத்து பேறுகளையும் பெற்ற நற்பாக்கியத்தை அடையமுடியும் என்றுரைக்கிறார் வள்ளுவர் (Parimelalhagar, 2002).

## விடாமுயற்சி

சமூகத்தின் முன்னேற்றம் என்பது ஒவ்வொரு தனி மனிதனின் முன்னேற்றத்தினை அடிப்டையாகக் கொண்டே அமையும் என்பதை,

"நடக்கமுடியாத தூரம் இல்லை

மனம் கடக்கமுடியாதஆழம் இல்லை"

மனிதன் எந்தவொரு காரியத்தையும் தன் உடல் உழைப்பைச் சார்ந்தோ, சாராமலோ வெற்றிகரமாகச் செய்து முடிக்க விடாமுயற்சியும் இருத்தல் வேண்டும். அப்பொழுது அக்காரியம் வெற்றிகரமானதாக அமைவதோடு, தனி மனித முன்னேற்றமும், சமூக முன்னேற்றமும் ஏற்படும் என்று கூறுகிறார் (Meenakshi, 2006).

## காளைக்குக் கடன்

இவ்வுலகில் உள்ள மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கென்று பல்வேறு துறைகளும் பொறுப்புகளும் உள்ளன. அப்பொறுப்பினை அவர்கள் கடமை உணர்வோடு செய்யும் பொழுதுதான் அது குறைகள் ஏதுமின்றி வெற்றி பெறும். பின்னடைவு ஏற்படும் நேரங்களில் தன்னம்பிக்கை மற்றும் விடாமுயற்சியுடன் செயல்பட்டு நிறைவேற்றுவதன் மூலம் தனிமனித முன்னேற்றம், சமூக முன்னேற்றம் காணவேண்டும்.

"ஈன்றுபுறந்தருதல் என்தலைக் கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

நன்னடைநல்கல் வேந்தற்குக் கடனே"

மேற்கண்ட பாடலின் வாயிலாக ஒரு தாயின் கடமை தன் பிள்ளையைப் பெற்று வளர்ப்பதாகும். தந்தையின் கடமை தன் மகனைச் சான்றோன் ஆக்குதல். வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமையாகும். நல்லமுறையில் அவனுக்கு போர்ப் பயிற்சி அளித்தல் வேந்தனின் கடமையாகும். ஒளிர்கின்ற போர்க்களத்திலே அஞ்சாது நின்றுச் சென்றுப் பகை மன்னர் களிற்றையும் கொன்று மீண்டு வருதல் வளர்ந்து காளையான அவர் கடமையாகும் என்று ஒரு ஆண்மகனின் கடமையென புறநானூறு சுட்டுகிறது (Swaminathar, 1971).

## கற்புடைத் துணைவி

சமூக முன்னேற்றத்தின் அடிப்படைத் தேவைகளில் பெண்களைப் போற்றிப் பாதுகாப்பது என்பது மிகவும் அவசியம். அதற்குத் தனிமனித ஒழுக்கம் மிகவும் இன்றியமையாததாகும்.

"ஆயிரம் பெண்மை - ஆணைத் தாங்கும்

பழியென்றால்

பெண்மை முற்றி - வெடிக்கும் ஆண்மை

நீ

தழல் படுவாய் - சீண்டாதேஒடுங்கு"

மேற்கண்ட வரிகளில் கவிஞர் பெண் தொழிலாளர்களுக்கு ஆணாதிக்க சக்திகளால் ஏற்படும் இன்னல்களைக் கண்டு மனம் வருந்துகிறார் (Meenakshi, 2013). அவர்களை மனித இனத்தின் தோற்றுவாய், ஆண்களை வழிநடத்தும் வீரப்பெண், முத்திரைப் பதிக்கும் இருமலர், நல்லிளம் நங்கை, செவ்வேர் படரும் ஈரப் பளிங்கு, கற்புடைத் துணைவி, அவள் ஒருதாய் என்றும் பெண்களின் பெருமைகளை எடுத்துக் கூறுகிறார்.

"சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் புணையைச் சுடும்"

என்ற குறள் வழி வள்ளுவர், சினம் என்னும் நெருப்பானது அதைக் கொண்டவனை மட்டும் அழிப்பதில்லை. மாறாக அவனுடைய இனத்தையும் சேர்த்து அழித்துவிடும் என்கிறார் (Parimelalhagar, 2002). இதனையே,

"மதித்திறப் பாரும் இறக்கமதியா

மிதித்திறப் பாரும் இறக்க - மிதித்தேறி

ஈயுந் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்

காயும் கதமின்மை நன்று"

மனிதர்களிலே பலதரப்பட்ட குணாதிசயங்களைக் கொண்டவர்களைக் காணலாம். அவர்களில் சிலர் ஒழுக்கத்தால் சிறந்து சமூகத்தில் தம்மை மேன்மைப்படுத்திக் கொள்பவர்களும் உள்ளனர். மறுபுறம் சிலர் தம் ஒழுக்கக்கேடால் தம்மைக் கீழ்ப்படுத்திக் கொள்பவர்களும் உள்ளனர். யார் எப்படி இருந்தாலும் ஒரு அற்பமான நம் தலைமீது ஏறி நம்மை மிதித்துவிட்டதே என்று அதைச் சுட்டுவிட வேண்டுமென்று சினம் கொள்ளாதிருப்பது சிறந்ததென்று நாலடியார் கூறுகிறார் (Gowmarishwari, 2009).

## மனிதநேயம்

"மொய்க்கும் துன்பச் சேர்க்கையால்

அழுக்கில் மிதக்கும்

சமூக மனிதனை

வெளுக்கவேண்டும்

அக்கினி வண்ணான்"

என்பதன் மூலம் இந்த மனித சமூகம் அனைத்துத் துறைகளிலும் முன்னேறியிருந்தாலும் இன்னும் முழுமையான சமூக முன்னேற்றம் அடையவில்லை. அதற்கு காரணிகளாக விளங்கும் போட்டி, பொறாமை, பழிவாங்கும் செயல், போலியான நட்பு, ஏமாற்றுதல், பதுக்கல், சுயநலம் போன்ற இந்த சமூகத்தில் புரையோடிப் போன பல சமூகச் சீர்கேடுகளால் விளையும் முற்களைக் களைந்தெறிய ஒரு நாவிதன் வேண்டும் என்கிறார் (Meenakshi, 2002).

கூடாநட்பால் மனிதர்களுக்கு சமூகத்தில் அங்கீகாரமும், பாதுகாப்பும், அரவணைப்பும் இன்றி அழுக்கில் மிதக்கும் சமூக மனிதனை வெளுக்க அக்கினி வண்ணான் வேண்டும் என்கிறார். மேலும் உள் ஒன்றும் புறம் ஒன்றும் வைத்துப் பழகும் போலியான மனிதர்களால் ஏற்படும் நம்பிக்கை துரோகம் எனும் கழிவுப் பொருளை அள்ளிப் புதைக்க அகம் சிரிக்கும் அற்புதத் தொட்டி எனும் நல் உள்ளம் கொண்ட மனிதர்கள் வேண்டும் என்கிறார். இதனை,

"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்

பண்புடைமக்கட் பெறின்"

என்ற குறள் வழி மக்களை சீர்திருத்துகிறார் வள்ளுவர். மேலும் நாலடியாரும் தனது பாடல்களில் பின்வருமாறு கூறுகிறார் (Parimelalhagar, 2002). சமூக முன்னேற்றத்தின் அடிப்படைக் காரணிகளில் ஒன்றான நற்பண்புகளோடு கூடிய நல்லோரின் நட்பை நாம் ஒவ்வொருவரும் பெறவேண்டும் என்ற கருத்தை,

“நாய்க்காற் சிறுவிரல்போல் நன்கணி யராயினும்

ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்?

சேய்த்தானுஞ் சென்றுகொளல் வேண்டும், செய்விளைக்கும்

வாய்க்காலனையார் தொடர்பு”

நாயின் கால்களிலுள்ள சிறிய விரல்களைப் போலே மிகவும் நெருக்கமுள்ளவராய் இருந்தாலும், ஈயின் காலளவாகிலும் உதவி செய்யாதவர்களுடைய சினேகத்தினால் என்ன பயன் அளிக்கும். ஆகவே இந்த கழனியை விளையும்படிச் செய்கின்ற நீர்க்காலைப் போன்றவர்களுடைய நட்பையடைய வேண்டும். அது தூரத்தில் இருந்தாலும் போய்க் கொண்டு வர வேண்டும் என்கிறார் (Gowmarishwari, 2009).

## மண்ணின் மைந்தர்கள்

ஒரு முழுமையான சமூக முன்னேற்றம் என்பது இயற்கை வளங்களையும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளையும் பாதுகாப்பது அவசியமாகும். மாறாக தற்போது தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சி, உலகமயமாக்கல் என்ற பெயரில் ஒவ்வொரு நாடும் போட்டிபோட்டுக் கொண்டு இயற்கை வளங்களைச் சூறையாடிச் சுற்றுப்புறச் சூழ்நிலைகளையும் மாசுபடுத்துகின்றனர். எதிர்காலச் சமூகம் வாழ்வதே கேள்விக்குறியாகும். இதனால் சூழ்நிலையை உணர்ந்தகவிஞர்,

“மண்ணிலே உயிர்த்து

மண்ணிலே பயின்று...

மண்ணிலே விழுதுவிடும்

நாங்கள் தானே மண்ணின் மைந்தர்கள்?”

மண்ணின் மைந்தர்கள் என்ற தலைப்பில் நம் முன்னோர்களின் இயற்கையோடு ஒன்றிய வாழ்வியலை படம் பிடித்துக் காட்டியுள்ளார். கருவுற்ற நாள் முதல் களிமண்ணைத் தின்னும் தாயையும், பிறந்த பச்சிளம் குழந்தைகள் அந்த மண் தரையினிலே தவழ்ந்து விளையாடி அதனிடையே சாம்பலுடன் காரை கலந்து உண்டதையும், உடலில் மண்பூசி சுகக்குளியல் மேற் கொண்டதையும், பாட்டி கொண்டு வந்த புற்று மண்ணைக் கொண்டுக் காயம் ஆற்றியதையும், சுட்ட மண்ணாலே செய்யப்பட்ட சொப்புகள், சட்டிபானைகள், அகல் விளக்குகள், மண்மேடை முதல் மண்குடிசை வரை அத்தனையும் மண்ணாலே செய்யப்பட்டிருந்ததையும், அவைகள் வெள்ளத்தால் கரைந்தாலும் நாணல் போல மீண்டும் முளைத்து எழும் என்பதையும் கூறுகிறார் (Meenakshi, 2004).

மேலும் இந்த மண்ணிலே உயிர்த்து அதிலேயே பயின்று வேரூன்றி விழுது விடும் நாங்கள் தானே மண்ணின் மைந்தர்கள்? என்ற வினாவோடு நின்று விடாமல், நாங்கள் இவ்வாறு கட்டிக் காத்த இயற்கை வளங்களை உறிஞ்சிவிட்டுத் தூசிவிடும் புழுதி மனங்களே என்று தனது ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகிறார். இறுதியாக தொழில்நுட்ப வளர்ச்சியின் பெயரால் இயற்கைக்கு மாறான இயந்திர மயமாக்கல் போன்ற செயல்களின் மூலம் எங்களை ஏன் தள்ளி வைத்திருக்கிறீர்கள்? என்று வினா எழுப்பி இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் மூலம் சமூகம் பாதுகாக்கப்படும் என்றுரைக்கிறார்.

பாரதியார் தனது தேசிய கீதங்கள் என்ற கவிதைத் தொகுப்பில் பாரத சமுதாயம் என்ற தலைப்பில், நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்பே சுதந்திர வேட்கையை மக்களுக்கு ஊட்டியதோடு மட்டுமின்றி நமது நாட்டின் இயற்கை வளங்களைப் பற்றியும் அதைப் பாதுகாப்பதன் அவசியத்தையும்

கூறுகிறார். மனித சமூகம் சந்தித்த உணவு பஞ்சத்தையும் அதை நீக்க வேண்டியதன் அவசியத்தையும் பின்வரும் கவிதை மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்.

"பாரத சமுதாயம் வாழ்கவே! வாழ்க வாழ்க!

மனிதருணவை மனிதர் பறிக்கும் - வழக்கம் இனியுண்டோ?

இனிய பொழில்கள் நெடிய வயல்கள் - என்னரும் பெருநாடு

இனியொரு விதிசெய்வோம் - அதை எந்த நாளும் காப்போம்

தனியொருவனுக் குணவிலையெனில் - ஜகத்தினை அழித்திடுவோம் வாழ்க!" (Subramanya Bharathiyar, 2014)

## தாயுள்ளம்

ஒரு சிறந்த சமுதாயத்தைக் கட்டமைப்பதில் குடும்பம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. அத்தகையக் குடும்பத்தை வடிவமைக்கும் சிற்பிகளாய்ப் பெற்றோர்கள் திகழ்கின்றனர். அவர்களின் சிறப்பையுணர்த்த,

"பௌர்ணமி முழுநிலவு

என்னுடனேயே தேய்ந்து

இல்லாமல் போனது

இன்று அமாவாசை"

கவிஞர் இக்கவிதையில் ஒரு தாய் தான் ஈன்ற குழந்தையை ஒவ்வொரு நாளும் அதன் மழலைச் சொல், நடை, உடை, அது செய்யும் குறும்புகள், சிரிப்பு, அழுகை மற்றும் அதன் உடல் அங்க அவயங்களையும், அதன் அன்பு, பாசம் மற்றும் பழிபாவமறியா வெள்ளை மனம் ஒவ்வொன்றையும் இரசித்து அந்தக் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும், சிறந்த எதிர்கால சமூகத்தை உருவாக்குவதில் ஒரு தாயின் பங்கை எடுத்துரைக்கிறார். இதன் மூலம் சமூக முன்னேற்றத்தில் அன்னையரின் பங்கு மகத்தானது என்பது விளங்கும் (Meenakshi, 2009).

## முடிவுரை

ஏற்றத்தாழ்வற்ற சமூகம் அமைய வேண்டும் என்பதே கவிஞரின் நோக்கமாகும். பல்வேறுபட்ட கலாச்சாரம், பண்பாடு, அரசியல் மற்றும் ஆன்மீகம் போன்ற பல கட்டமைப்பிற்குள் வாழும் சமூக அமைப்பு கல்வி, பொருளாதாரம், வணிகம், தொழில்துறை முதலியவற்றின் மூலமாக சமூகமானது ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையதாய் உள்ளது. இருப்பினும் மக்கள் சமூகம் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு கவிஞர் இரா. மீனாட்சி அவர்கள் தனது பல்வேறு கவிதைத் தொகுப்புகள் மூலம் எடுத்துரைப்பது இக்கட்டுரையின் வாயிலாக விளங்கும்.

## References


Gowmarishwari, S. (2009) Pathenen Keelkanaku, Saradha Pathippagam, Chennai, India.

Meenakshi, R. (2002) Sudupookkal, Saradha Pathippagam, Chennai, India.

Meenakshi, R. (2004) Deepavalippagal, Saradha Pathippagam, Chennai, India.

Meenakshi, R. (2006) Vaasanaippul, Saradha Pathippagam, Chennai, India.

Meenakshi, R. (2008) Uthaya Nagirilirunthu, Saradha Pathippagam, Chennai, India.

Meenakshi, R. (2009) Kodivilakku, Saradha Pathippagam, Chennai, India.

Meenakshi, R. (2013) Nerunji, Saradha Pathippagam, Chennai, India.

Meenakshi, R. (2020) Mungil Kannadi, Saradha Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Subramanya Bharathiyar, (2014) Bharathiyar Kavithaigal, Sri Hindu Publications, Chennai, India.

Swaminathar, U.V. (1971) Purananuru Mollamum Uraiyum, U.V. Sa. Library, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License